


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.7.2023) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற வேளாண் வணிகத் திருவிழாவில், ஆளுமையில் சிறந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கான விருதினை புதுக்கோட்டை இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், ஈரோடு கழனி உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், ”வர்த்தகத்தில் சிறந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கான விருது கடலூர் மாவட்டம், மங்களூர் தானியப் பயிர்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், சேலம் வீரபாண்டி களஞ்சிய ஜீவிதம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், தூத்துக்குடி பயறு உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும் வழங்கினார். இவ்விழாவில், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், சர்க்கரைத் துறை ஆணையர் சி.விஜயராஜ் குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத் துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.7.2023) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற வேளாண் வணிகத் திருவிழாவில், 2022–23–ஆம் ஆண்டில் வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிக்கான விருதினை கடலூர் மாவட்டம், பண்ருட்டியை சேர்ந்த விவசாயி ம.இராமகிருஷ்ணனுக்கு விருதும், இரண்டு இலட்சம் ரூபாய்க்கான பரிசுத் தொகையும் வழங்கினார். இவ்விழாவில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், சர்க்கரைத் துறை ஆணையர் சி.விஜயராஜ் குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலை, சி.எஸ்.ஐ. செவித்திறன் குறையுடையோருக்கான மேல்நிலைப் பள்ளியில், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில், நேற்று முன்தினம் (08.07.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை இயக்குநர் கமல் கிஷோர், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. இணைந்து நடத்திய மாபெரும் கால்பந்தாட்ட போட்டி ராயப்பேட்டை நியூ காலேஜ் மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., மாநில துணைச் செயலாளர்கள் பொன்.கௌதமசிகாமணி எம்.பி., எஸ்.ஆர். பார்த்திபன் எம்.பி.. சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், த.வேலு, நா.எழிலன், மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.சிற்றரசு, சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் மதன்மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஜெயங்கொண்டம் நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நகரக் கழகச் செயலாளர் வெ.கொ.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் உரையாற்றினர். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.7.2023) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் வேளாண் வணிகத் திருவிழா 2023யை தொடங்கி வைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சர்க்கரைத் துறை ஆணையர் சி.விஜயராஜ்குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால் வேளாண்மை ஆணையர் டாக்டர் எல்.சுப்பிரமணியன் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



சென்னை, கோபாலபுரத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (08.07.2023) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நவீன மயமாக்கப்பட்ட அமுதம் மக்கள் அங்காடியை திறந்து வைத்து பார்வையிட்டார். இதில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை ஆணையாளர் வே.ராஜாராமன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.சுப்பையன், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிர்வாக இயக்குநர் அ.சிவஞானம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

